**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 13** |
| **Name** | : | திருமதி. முத்துமாரி |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.09.2025**

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் திருமங்கலம் தாலுகா,சின்னமறவன்குளத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் ராஜா பீடா ஸ்டால் நடத்தி வருகிறார். எங்களுக்குச் சொந்தமான காம்பவுண்டு வீட்டை வாடகைக்கு விட்டும், பால் வியாபாரம் செய்தும் வருகிறோம். எங்கள் காம்பவுண்டு வீட்டில் பாக்கியலெட்சுமி என்பவர், அவரது கணவரைப் பிரிந்து அவரது மகனுடன் வசித்து வந்தார். வேறு விஷயம் எதுவும் தெரியாது. போலிசார் ஒரு நாள் வந்து, பாக்கியலெட்சுமி வீட்டில் ஒரு குழந்தையை வைத்திருப்பதாக எங்களுக்கு தகவல் வந்தது என்று சொன்னார்கள், நான் டீக்கடைக்குப் போய்விடுவேன், அதனால் எனக்கு எந்த

விபரமும் தெரியாது என்று சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 18.06.2016ம் தேதி பாக்கியலெட்சுமி வீட்டில் குழந்தை அழும் சத்தம் கேட்டு, நான் விசாரித்த போது, கவிதா என்ற பெண், மதுரையில் இருந்து வந்திருப்பதாகவும், 2 நாட்கள் தங்கிவிட்டு போக இருப்பதாக சொன்னதாகவும், 21.06.2016ம் தேதி மாலை 05.00 மணிக்கு மதுரையில் இருந்து போலிஸ் வந்து, கவிதாவை அவர் வைத்திருந்த கைக்குழந்தையுடன் அழைத்துச் சென்றதாகவும், நான் விசாரித்தபோது, அந்த குழந்தையை விற்பதற்காக பாக்கியலெட்சுமி வீட்டில் தலைமறைவாக இருந்ததாகச் சொல்லிவிட்டு, தற்போது எதிரியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW : 14** |
| **Name** | **:** | **திரு. கண்ணன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.09.2025**

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருமங்கலம் தாலுகா, சின்னமறவன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் அசா13 முத்துமாரி என்பவரின் காம்பவுண்டு வீட்டில் குடியிருந்தேன். அந்த காம்பவுண்டு வீட்டில் பாக்கியலெட்சுமி என்பவரும் குடியிருந்தார். இந்த வழக்கு விஷயமாக எனக்க எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை

செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

போலிசார் விசாரணையின் போது, கடந்த 18.06.2016ம் தேதி முதல் பாக்கியலெட்சுமி என்பவர் வீட்டில் கவிதா என்ற பெண் தங்கியிருந்ததாகவும், விசாரித்தபோது, 2 நாட்களில் சென்றுவிடுவதாக சென்றுவிடுவதாக கேள்விப்பட்டதாகவும், 21.06.2016 மாலை 05.00 மணிக்கு மதுரையில் இருந்து போலிஸ் வந்து, கவிதாவை அவர் வைத்திருந்த கைக்குழந்தையுடன் அழைத்துச் சென்றதாகவும், நான் விசாரித்தபோது, அந்த குழந்தையை விற்பதற்காக பாக்கியலெட்சுமி வீட்டில் தலைமறைவாக இருந்ததாகச் சொல்லிவிட்டு, தற்போது எதிரியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை